மகளிர கலையகங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
ஜெயர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ 1.00 5-00

இன்றைய அரிமுகம்!
நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளிக்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 30 வியாழக்கிழமை (15 09 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 292

கடந்த காலத்தில் இராணுவத்தினர் புரிந்த அட்டூழியங்கள் குறித்து முழு விசாரணை!

ஜப்பான் நாட்டு செய்தியாளர்கள் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், செப். 15
ஜப்பான் வானொலியைச் சேர்ந்த செய்தியாளர்கள் மூவர் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று விமானமூலம் இங்கு வந்து சேருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-4)

இலங்கை வானொலியில் பிரபா பேட்டிக்கு முதலிடம்!

கொழும்பு, செப். 15
தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த விசேட பேட்டி இலங்கை வானொலியின் நேற்றைய செய்திகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டது.

நேற்று வானொலி செய்தியின் பின்னர் திரு. பிரபாகரனின் பேட்டி முழுமையாக—அவரது குரலிலேயே—இலங்கை வானொலியின் மற்ற ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

சர்வதேச செய்திச் சேவைகளிலும் இந்தப் பேட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

(ஒ-ஐ)

அரசியல் வாதியின் வீட்டில் குண்டுகள், வெடிபொருள்கள்

ராணுவச் சீருடைகளும் மீட்பு

கொழும்பு, செ. 15
நுவரெலிய நகரசபையின் முன்னாள் தலைவர் ஒருவரின் வீட்டில் இருந்து வெடிப்பொருள்கள், மோட்டார் குண்டுகள், ரிப்பிட்டர் ஷொட்கன்கள் மற்றும் இராணுவ பாணி சீருடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இராணுவ லெப்டினன்ட் ஒருவரை இராணுவத் தலைமையகம் விசாரணைக்குட்படுத்தியுள்ளது.

இந்த இராணுவ அதிகாரி முன்னாள் நகரசபைத் தலைவரின் உறவினர் என்று சொல்லப்படுகிறது.

முன்னாள் தலைவரும் அவரது மகன், இன்னொரு உறவினர் ஆகியோர் இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஒ-எ)

நீதியமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

லண்டன், செப்ரெம்பர் 15

கடந்த காலத்தில் இராணுவத்தினர் புரிந்த அட்டூழியங்கள், கொடுமைகள் குறித்தும் முழு அளவில் விசாரணை நடத்தப்படும் என்று நீதி, அரசமைப்பு விவகார மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ஜி. எல். பீரிஸ் அறிவித்திருக்கிறார்.

பி.பி.ஸியின் தெக்கிழக்கு ஆசிய சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குரிய கந்தவில் மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக சட்ட விசாரணை உரிய முறையில் நடத்தப்படும் என்று அவர் கூறினார்.

கடந்த காலத்தில் அரசின் ஏற்பாட்டில் இயங்கிய கொலைகாரக் குழுக்கள் குறித்து முழு விசாரணை

(3 ஆம் பக்கம் பார்க்க)

கப்பல்களில் வந்துள்ள புத்தம்புது பஜோராக்கள்

கொழும்பு, செப். 15
கடந்த சில தினங்களில் நூற்றுக்கு அதிகமான புத்தம் புது பஜோரா வாகனங்கள் கப்பல்களில் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன.

கடந்த அரசாங்கத்தின் உத்தரவின் மீது இவ்வாகனங்கள் பொலீஸ் திணைக்களத்தின் பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பொலீஸாரின் பாவனைக்கான பஜோரா வாகனங்கள் கடந்த வாரம் தலைமைத்திற்கு கப்பலில் வரவில்லை என்று கிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அப்படியானால் யாரின் உத்தரவுக்கேற்ப இவ்வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

(ஒ-எ)

தலைவர் பிரபா எழுதிய பதில் சந்திரிகாவுக்கு கிடைத்தது

வழிமுறைகளை அரசு தயாரிக்கும்

கொழும்பு, செப். 15
விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு. வே. பிரபாகரன் பிரதமர் சந்திரிகாவுக்கு பதில் அனுப்பியிருக்கிறார் — என்று தகவல். விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்

அமைச்சரவை முடிவுகளை வெளியிடுவதற்காக நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

பிரதமர் சந்திரிகாவுக்கு "பாக்ஸ்" மூலம் அனுப்பிய பதில், தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதன் பிரதிநிதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டிருப்பதாகவும் அமைச்சர் சொன்னார்.

இனிமேல் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு தேடிக் கொண்டு செய்யும்; இது விடயத்தில் என்னென்ன வழிமுறைகள், உத்திகள் கையாளப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்து அவற்றின் பிரகாரம் நடந்து கொள்ளும். அந்த விவரங்களை வெளிக்கொணர வேண்டிய அவசியம் இல்லை. பத்திரிகைகள் மூலம் அவற்றை மக்களுக்குத் தெரிவிப்போம் — என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

(அ)

எம்பிலிப்பிட்டியாவிலும் மனிதப் புதைகுழிகள்!

விவரம் சேகரிக்கப்படுகின்றது

கொழும்பு, செப். 15
சூரியகந்தவில் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் போன்றவை எம்பிலிப்பிட்டியாவிலும் உள்ளன என்றும்—

அவை பற்றிய திடமான விவரங்கள் சேகரிக்கப்பட்டபின்னர் அப்புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப்படும் என்றும் இரத்தினபுரி மாவட்ட எம்.பியும் பிரதி அமைச்சருமான பவுத்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இதற்கிடையில்—

குரியகந்தவில் நேற்று ஆரம்பமான புதைகுழி தோண்டும் வேலைகள் பாதகமான காலநிலை காரணமாக பிற்பகலில் இடைநிறுத்தம் செய்யப்பட்டன.

முன்னர் தோண்டப்பட்ட மூன்று புதைகுழிகளே மீண்டும் நேற்று தோண்டப்பட்டன.

அப்போது மேலும் சில சடலங்களின் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஜனவரியில் கண்டெடுக்கப்பட்ட

(3 ஆம் பக்கம் பார்க்க)

பொலீஸ் கொமாண்டோ சந்திரிகாவுக்குப் பாதுகாப்பு!

கொழும்பு, செப் 15
பிரதமர் சந்திரிகாவுக்குப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை இன்று முதல் பொலீஸ் கொமாண்டோக்கள் மீண்டும் ஏற்கின்றனர்.

சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் இத்தகவலை தெரிவித்தனர்.

திருமதி சந்திரிகா பிரதமராகப் பதவி ஏற்று உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் வசிக்கச் சென்றதும், அதுவரை அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த பொலீஸ் கொமாண்டோக்கள் இராணுவ விசேட படையணியிடம் அப்பொறுப்பைக் கையளித்து விட்டு வெளியேறி இருந்தனர்.

இப்போது பிரதமரின் பாதுகாப்பை பொலீஸ் கொமாண்டோக்களே ஏற்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

பிரதமரின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்பதற்காக கிழக்கு மாகாணத்தில் இருந்து கொமாண்டோக்களின் ஒரு தொகுதி கொழும்பைச் சென்றடைந்துள்ளது.

பிரதி பொலீஸ் மா அதிபர் காமினி குணவர்தனாவின் தலைமையான பிரதமரின் பாதுகாப்புப் பிரிவுடன் இணைந்து பொலீஸ் கொமாண்டோக்கள் பணிபுரிவர். (ஒ-எ)

பிரதமரின் சபார்சின் பேரில் நாணய சபை உறுப்பினராக சண்முகம் நியமனம்

கொழும்பு, செப். 15
பிரதமரின் சிபார்சின் பேரில் மத்திய வங்கி நாணய சபையின் உறுப்பினராக முன்னாள் நிறைவேற்றுச் செயலாளர் திரு. சி. சண்முகத்தை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்தப் பதவியில் இருந்த அன்னமயில் ராஜினாமாச் செய்த திரு எல் கிராஸ்லி ஜெயவர்த்தனாவின் இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை சிவில் சேவையில் முன்னர் பணி புரிந்த திரு. சி. சண்முகம், அரசாங்க சேவையில் இருந்த காலத்தில் பல முக்கிய பதவிகளை வகித்திருக்கிறார். கடைசியாக அவர் நிறைவேற்றுச் செயலாளராக உடனமையாற்றினார்.

(ஒ-4)

ஜனாதிபதி தேர்தலில் ரெலோவும் போட்டி!

கொழும்பு, செப். 15
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது வேட்பாளராக ஒருவரை நிறுத்துவதற்கு ரெலோ இயக்கம் முடிவு செய்துள்ளதாக அதன் செயலாளர் நாயகம் கே. கிஷோஜிதன் தெரிவித்துள்ளார்.

கனடாவில் கடந்த ஞாயிறன்று நடந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முன்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றும் நிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

அகதிகள் குடியமர்த்தல் பற்றி ஆராய அமைச்சரவைக் குழு

கொழும்பு, செப். 15
இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் பலர்களை வேறு இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகளை கவனிப்பதற்கென அரசாங்கம் 5 கூறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை உபகுழு ஒன்றை நியமித்துள்ளது.

தமது சொந்த இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் இவர்களைக் குடியமர்த்தும் சாத்தியம் பற்றி ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரவையின் பேச்சாளரான அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா கொழும்பு விசுவமடுவாயில் நேற்று பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார். (ஒ-4)

எங்களை விட்டுத் தொண்டா எளிதில் செல்லமாட்டார்!

கொழும்பு, செப் 15
"இ. தொ. கா. தலைவர் எஸ் தொண்டமான் நாடாளுமன்றத்தில் தனியான நிலைப்பாடுடன் செயற்படுகிறார். ஆனாலும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு எளிதில் போகமாட்டார்"

எதிர்க்கட்சித் தலைவர் முச்சந்தி முரளி

பாவம் உவர் காமினியர் நம்பி போகமாட்டார்.....!

இது காமினியின் நம்பிக்கை

திரு. காமினி திசாநாயகா முன்னாள் வாரு நம்பிக்கை தெரிவித்துள்ளார் என கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

பொ. ஐ. முன்னணி அரசுக்கு இ. தொ. கா. ஆதரவு வழங்கும் என தொண்டமான் தெரிவித்துள்ளாரே. அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என காமினி திசாநாயகாவிடம் கேட்கப்பட்ட போது —

திரு. தொண்டமான் நாட்டின் அதி முக்கியமான பொருளாதாரத்துக்குப் பொறுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

செல்லச்சாமியின் புதிய கட்சி!

கொழும்பு செப் 15
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான திரு. எஸ். தொண்டமானுக்குப் போட்டியாகச் செயற்படும் திரு. எம்.எஸ் செல்லச்சாமி நேற்று கொழும்பில் இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரான புதிய அரியல் கட்சி ஒன்றை அமைத்திருக்கிறார்.

திரு. செல்லச்சாமியும் அவருடைய கட்சியினரும் திருமதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவது என்று முடிவு செய்துள்ளனர்.

தலைவர் பிரபாகரனின் நினைவு நாட்கள் இன்று எழுச்சியுடன் ஆரம்பம்

சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி லெப். கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவு நாட்கள் தமிழீழம் எங்கும் இன்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

வழமைபோல் தியாகி திலீபனை நினைவுகூரும் எழுச்சி நிகழ்வுகள் வடக்கு நாட்டின் சகல பகுதிகளிலும் ஆரம்பமாகியுள்ளன.

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் கோட்டமட்டத்திலும் வட்டவை பிரிவுகளிலும் ஆலயங்களிலே உண்ணாவிரத பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அரச அலுவலகங்கள், தனியார், பொதுநிறுவனங்கள், கல்வி நிலையங்கள், வாடகைகள், தமிழீழ நிர்வாக சேவை அலுவலகங்கள், விடுதலைப் புலிகளின் முகாம்கள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

ஜே. ஆர். குறித்து விசாரிக்க ஆணைக்குழு நியமிக்குக!

அரசுக்குக் கோரிக்கை

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த போது அவர் நடந்துகொண்டவிதம் குறித்து பூரண விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை நகரசபைத் தலைவர் லெனின் பொன்னம்பேரு, சபையின் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் இக்கோரிக்கையை விடுத்தார்.

விசாரணையின் போது ஜெயவர்த்தனா குற்றவாளியாகக் காணப்படின், அவரின் குடியுரிமையை அரசு ரத்துச் செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய பிரதமர் சந்திரிகாவை பாராட்டும் பிரேரணை மீது பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(உ-எ)

1990 ஜூலில் சண்டை மூண்டபோது பொலீஸார் சரணடைந்தது குறித்து பூரண விசாரணை

பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்ளும்

கொழும்பு, செப், 15
1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அறநூறுக்கு மேற்பட்ட பொலீஸார் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்ததற்கான சூழ்நிலைகள் குறித்து விரிவான விசாரணை ஒன்றைப் பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இது தொடர்பாக பூரணமான விசாரணை ஒன்றை நடத்த தான் நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அரசின் கவனத்துக்கு உரிய "கேர்ஹவுஸ்" பத்திரிகையில் வெளியாகியுள்ள தகவல்கள் வருமாறு:—

விடுதலைப் புலிகளுக்கும் முன்னைய அரசாங்கத்துக்கும் இடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கியடைந்தன்று முடிந்து வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலீஸாரை விடுதலைப்புலிகளிடம் சரணடையுமாறு சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் உத்தரவிட்டதாகச்சொல்லப்படும் குற்றச்சாட்டுகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள், மரக் கன்றுகள் விற்பனைக்குண்டு. ஆண்டா பார்ம், இணுவில். (சி-9171)

ஓடக்கூடிய நிலையிலுள்ள A/60 கார் விற்பனைக்கு உண்டு. சா. கணேசலிங்கம், கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (32874)

வீடு விற்பனைக்கு

கொக்குவில் பூநகரி மரத்தடி சமாதி வீதியில் தலையாளி வைரவர் கோயிலுக்கு முன்னதாக உள்ள ஒழுங்கையில் ஒன்றரை பரப்பு காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை தொடர்பு கொள்ளவும்: கமல் இந்திரகுமார், தலையாளி ஒழுங்கை, கொக்குவில். (32870)

புறொயிலர் குஞ்சு

Prima Broiler (பிறிமா புறொயிலர்) ஐந்து நாள் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. "மல் விநாயகி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32872)

இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி கிலோ 140/- மொத்த வியாபாரிகளுக்கும்ஹோட்டல்களுக்கும் கிலோவுக்கு ரூபா 10/- சலுகை உண்டு. காலை 7 மணிக்கும் 9 மணிக்கும் தொடர்பு கொள்ளவும்: இல. 31, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். I. C. R. கோழி. (32860)

சிறுகதைகள்

வெள்ளிப்பாதரசம், இந்த நூற்றாண்டின் ஈழத்து சிறுகதை முதல் தொகுதி, ஒரு கடை கொழுந்து இந்த நூற்றாண்டின் ஈழத்து சிறுகதை இரண்டாம் தொகுதி செ. யோகநாதன். விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-9156)

தவறிவிட்டது

வேலணையைச் சேர்ந்த பா. இராசலட்சுமி என்பவரின் நிவாரண முத்திரை 7-9-94 அன்று நாவலர் வீதியும், ஆரியகுளம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதியிலுள்ள ஜெயா அழகு மாடத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். [32876]

சோதிடம்

கல்வியில் சிறியா? உத்தியோகம் கைகூடுமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? வேட்டுப்பாருங்கள்! பி. ப. 3 முதல் 6 வரை. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, இணுவில் ஆனந்தா சோதிட நிலையம், ரயில்வே கடவைச் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். இன்றும் காலை 8-30—12-30. (32883)

UNIVERSITY OF JAFFNA

POST-GRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION ADMISSION TEST - 1993

The above Examination will be held on 17-09-1994 at 9 00 a.m. in the Ramanathan Hall, University of Jaffna. The applicants who are eligible to sit for the above Examination are requested to collect the admission card from 16 09 1994 in the Examination Branch during the office hours.

- REGISTRAR.

[C-9119]

தென்னிந்திய திருச்சபை

யாழ். மத்தியம்

தொழிற்பயிற்சி நிலையம்

இணுவில்

- தையல
- பூவேலை
- கைவேலை
- மனையியல்
- பன்னவேலை
- கேக் ஐசிங்
- சிகை அலங்காரம்

ஆகிய துறைகளில் இலவச 6 மாத கால பயிற்சி நெறி

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 09 - 1994

வகுப்பு ஆரம்பம்: 01 - 10 - 1994

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திருமதி I. ஜெயக்குமாரன்,
C/o செயலாளர்,
மக்லியோட் மருத்துவமனை,
இணுவில்.

[சி 9121]

A/L 95, 96

பிரத்தியேக வகுப்பு

இரசாயனம்,
பௌதீகம்

ஆகிய இரு பாடங்களும் பிரத்தியேகமாக கற்பிக்கப்படும்.

தொடர்பு:

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

[சி-9114]

நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்வு

கல்லூரியின் பிரதான நுழைவாயில்

வரவேற்பு வளைவு திறப்புவிழா

காலம்: 16 - 09 - 1994 வெள்ளிக்கிழமை

நேரம்: பிற்பகல் 1 மணி

பிரதம விருந்தினர்:

திரு: S.P. சிவஞானம் அவர்கள்
[சட்டத்தரணி]

அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, கன்னாகம்.

[சி/5721]

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்: 01 — 05 — 1910

மறைவு: 17 — 08 — 1994

கரவெட்டியைச் சேர்ந்த

அமரர் கதிர்காமு பொன்னையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்/அதிபர்)

17 08-94 இல் அமரத்துவம் அடைந்த எமது தந்தையின் மரணச் சடங்கில் பங்குபற்றி உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு,

நாளை (16-09-94) வெள்ளிக்கிழமை நண்பகல் எமது யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— பிள்ளைகள்.

550, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(32873)

புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

நிகழும் பவ வருடம் ஆவணி மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை (15-09-94) பகல் 10 மணி முதல் 11-30 மணி வரையுள்ள உத்தராட நட்சத்திரமும் ஏகாதசி திதி கூடிய சுபவேளையில்,

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்

○ கமலா காலணியகம் ○

என்னும் நிலையத்தை திறந்து நடத்த திருவருள் கூடியுள்ளமையினால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து நிலையத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கமலா காலணியகம்,
இல: 4, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
தங்கள் நலன்விரும்பி நாடும்:
நீர்வாகத்தினர்,
கமலா காலணியகம்.

(7913)

வட தமிழீழத்தில்

சந்தன காட்சி அளித்த

புங்குடுதீவு கதிர்காமம்

உயர் திருவிழா

அபிடேக ஆராதனை. பூசை

15-09-1994 வியாழன் காலை 8-30மணி

இடம்: அருள்மிகு செந்தில் கதிர் வேலாயுத சுவாமிகள் திருக்கோயில்
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

அற்புதக் காட்சி சந்தன கதிர்காமம்
பொற்புறு பூங்குடிப் புனித மல்லிகைநாழில்

அனுபல்லவி

கற்பனையில் கதிர் காமத்தனம் செல்ற
சொற்பதம் கடந்த பக்தித் தொண்டர் மனம் உருக

சரணம்

கதிர்காமக் கந்தனை காணுவோமோ என்றே
அதி ஆவல் கொண்ட பக்தர் அழகுப் பூங்குடியில்
கதி கதிர்காமா என்றே கதறியழுத பக்தர்
பதியான பூங்குடியில் பார்த்து துதிக்க அருள்
வேலெடுத்தேந்தி வந்தான் கிரியேறி வந்தான்
காவெடுத்தே பூங்குடி கருவை மல்லிகைநாழில்
கோல எழில் கோயில் கொண்டான் வடிவேலன்
சாலச் சிறந்த அருள் சண்முகன் எமக்கருள்.

— கவிமாமணி ந. வீரமணி ஐயர் —

✱ பக்தர்களை அன்புடன் அழைக்கின்றோம் ✱

— புங்குடுதீவு கதிர்காமம் அறங்காவலர் சபை.

விளம்பர அனுசரணை:

அ. பொ. மகேந்திரன் களஞ்சியம்
80, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி) யாழ்ப்பாணம்.

புதிய கல்யாணி நகைத் தொழிலகம்
320/14, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ஈஸ்வரன் பல்பொருள் விற்பனை நிலையம்
ஆடிவீதி, திருநெல்வேலி.

நித்தியா நகை மாளிகை
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிங்கப்பூர் உணவகம்
41, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அருமை உணவகம்
8, ஜம்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்.

டாக்டர் எஸ். கணேஸ் J. P.
கமலா டிஸ்பென்சரி
651, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

செ. தில்லைநாதன் J. P.
புங்குடுதீவு.

(7915)

ஆசாரத்துக்குரிய

யோசவ் வாஸ்

அடிகளாரின்

வாழ்வு பணி பற்றிய

கண்காட்சி - பொம்மலாட்டம்

இடம்: யாழ். மறைக் கல்வி நிலையம் (ஆயர் இல்லம்)

காலம்: **15, 16, 17 - 09 - 1994**
காலை 9-00 முதல் மாலை 5-00 வரை

கலை நிகழ்ச்சி

நாட்டுக்கூத்து
(தென் மோடி ஆட்டக்கூத்து)

இடம்: மரியன்னை பேராலய கலை அரங்கு

காலம்: **17 - 09 - 1994** மாலை 6-30 மணி

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

பிரவேசம் இலவசம்

வாழ்த்துவோர்:

சில்லாலை பங்கு மக்கள்.

[32891]

தசாக அழைப்பு

திருமதி வல்லவாம்பாள் கிருஷ்ணமூர்த்தி ஐயர்

07-09-94 புதன்கிழமை இறைவடி சேர்ந்த எமது தாயார் திருமதி வல்லவாம்பாள் கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்:

தசாகம்: (கல் எடுப்பு)	16 - 09 - 94	வெள்ளி	காலை 10மணி
ஏகோதிஷ்டம்: மாசியம்	17 - 09 - 94	சனி	காலை 10மணி
சபிண்டீகரணம்	18 - 09 - 94	ஞாயிறு	காலை 10மணி
கிரகயக்ஞம்	19 - 09 - 94	திங்கள்	காலை 10மணி

உற்றார், உறவினர், நண்பர்கள் மேற்படி கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்

"குமரபவன்"
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(31887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

தலைவர் வருத்தவறி

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்போவதாகப் புதிய அரசாங்கம் அறிவித்துள்ள இவ்வேளையில் — மிகக் குறிப்பாக, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் விருப்பத்தை பிரதமர் சந்திரிகா வெளியிட்டுள்ள இவ்வேளையில் —

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன், பி. பி. ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வி, அவரது நிலைப்பாட்டை — விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை — மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளது.

அவரது செவ்வி, சிங்கள அரசியல் தலைவர்களுக்கும், சிங்கள மக்களுக்கும், சிங்களப் பத்திரிகையாளர்களுக்கும், வெளி உலகத்துக்கும், சர்வதேச அரசியல் அவதானிகளுக்கும் பகல் வெள்ளை போல பல அம்சங்களை தலைகீழாக்கியுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சந்திரிகா அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதைப் பெரும்பாலானோர், சிங்கள மக்களை மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் "குழப்பி அடிப்பதற்காக" முன் வைக்கும் விசயம் பிரபாகரனுக்கு தலைவர் பிரபாகரன் தர்க்க ரீதியாகத் தக்கவாறு கணுகி, தகுந்த பதிலடி கொடுத்திருக்கிறார்.

பேச்சுவார்த்தை நடத்து வதற்காகப் போர் நிறுத்தம் செய்தால், அதனைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தங்களைப் பலப்படுத்துவார்கள். அவ்வாறு பலப்படுத்திக் கொண்டு, பிரேமதாசா அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டு மீண்டும் போரில் ஈடுபட்டது போல்,மீண்டும் சண்டைக்கு வருவார்கள் என்ற கருத்தை நார்வே நோர்வேஜியர்கள் சில தீய சக்திகளால் முன்வைக்கப்படுகின்றது. பெரிதான ஆதரவாளரும், இராணுவத் தரப்பினரும் இந்த இரு அம்சங்களையும் "துருப்பு பிடித்து" பேசுகின்றனர்; எழுதுகின்றனர்.

விடுதலைப் புலிகள் தமக்குத் தேவையான ஆயுதங்களை வாங்குவதற்குப் போதுமான நிதி அவர்களிடம் இல்லை. விடுதலை இயக்கம் எதிர்கொள் அந்தரவு நிதி வளம் கிடைப்பது கடினம். அரசாங்கம் இராணுவத்துக்கு வாங்கிக் கொடுக்கும் ஆயுதங்களைப் பறித்தே விடுதலைப் புலிகள் தமது இராணுவத்தைத் தாக்குகின்றனர்.

எனவே புலிகள் தாக்குதல்களை நடத்தி ஆயுதங்களைப் பெற்றுப் பலமடைவதற்கு யுத்த நிறுத்தம் பெரும் தடையாக அமையுமே ஒழிய அவர்களுக்கு பலம் சேர்க்க உதவும் என்பது உண்மைக்கும் புறம்பானதாகும். இதனைத் தலைவர் மிக விவரமாக விளக்கி இருக்கிறார்.

விடுதலைப் புலிகளை நம்ப முடியாது. அவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறிக் கொண்டு வருவார்கள்; பின்னர் முறித்துக் கொண்டு வந்தபின் இறங்குவார்கள் என்று கூறும் நிபுணர்கள் உதாரணம் காட்டுவது பிரேமதாசா அரசுடன் விடுதலைப் புலிகள் நடத்திய பேச்சுவார்த்தையையே ஆகும்.

பிரேமதாசா அரசுடன் நடந்த பேச்சுக்களின்போது, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு எதையும் அந்த அரசு முன் வைக்காமல் காலத்தைக் கடத்தி இழுத்தடித்தமையே அது முறிந்து போக நேர்ந்தது என்பதைத் தலைவர் விவரமாகத் தெளிவுபடுத்தி உள்ளார்.

புதிய அரசு தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன்வைத்து நீதி வழங்குவதற்கு உண்மை விருப்பமாகப் பேச்சுவார்த்தை முறித்துபோகும் என்ற அச்சம் எழவேண்டியதில்லையே!

வடமாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் இன்று திரும்பி வருவதற்கு விடுதலைப் புலிகள் தடையாக இருக்கமாட்டார்கள் என்பதனையும் தலைவர் தெளிவாக்கி உள்ளார்.

மொத்தத்தில் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேசுவதற்கு, தீர்வு ஒன்றைக் காண்பதற்குகான உகந்த சூழலைத் தலைவர் பிரபாகரன் வகுத்திருக்கிறார். அதில் நம்பிக்கையோடு நடந்து வெற்றிகாண்பது சந்திரிகாவின் துணிச்சலிலும், விவேகத்திலும், அரசியல் சாதுரியத்திலுமே தங்கி உள்ளது.

பிரபா - சந்திரிகா

வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்திப்பு

ஒன்றுக்கு காலம் நெருங்குகிறது

'சண்டே லீடர்' தகவல்

கொழும்பு, செப். 15

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையேயான வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பு இடம் பெறுவது சில வாரங்கள் அல்லது சில மாதங்களிலே தான் நடக்கியுள்ளது.

சண்டே லீடர் வார பத்திரிகையில் அதன் இணை ஆசிரியர் இக்பால் அத்நாஸ் மேற்கண்டவாறு எழுதியுள்ளார்.

"சமாதானத்துக்கான பிரதமர் சந்திரிகாவின் 'திறந்த' இராஜதந்திரம் என்ற தலைப்பிலான கட்டுரையில் இது தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு யுத்தம்முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு கொடுத்த உறுதிமொழிக்கு முன்னுரிமை கொடுத்து பிரதமர் சந்திரிகா செயல்படுகிறார்.

இதற்காக "திறந்த" ராஜதந்திர அணுகுமுறையை அவர் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றார்.

வடபகுதியில் உள்ள இராணுவ நிலைகளும் பற்றி படை உயர் தளபதிகளுடன் ஆராய்ந்த மறுவாரம் பிரதமர் சந்திரிகா, யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகத்துடன் நீண்ட நேரம் இனப்பிரச்சினை பற்றி உரையாடினார்.

பின்னர் யாழ். அரச அதிபர் பிரதமரைச் சந்தித்த யாழ். குடா நாட்டில் பொதுமக்களின் நிலை பற்றி விளக்கினார்.

பொ. ஐ. மு. அரசும் விடுதலைப் புலிகளும் பொதுவான தொடர்பு சாதனங்கள் மூலம் சமாதானம் பேசுவதாகத் தெரிகிறது என்றாலும் —

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் இருதரப்பினரும் சில சம்பிரதாயபூர்வமற்ற தொடர்புகள் மூலம் பேச்சுகளை தொடர்ந்தனர் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இத்தொடர்புகள் ஒரு முன்னோடியே என்றும் அவ்வட்டாரங்கள் சொல்கின்றன.

பக்கவாட்டங்களாக நடைபெறும் இப்பேச்சுகள் பரிமாறப்படுத்தப்படும் என்று பிரதமர் பாதுகாப்பு உயர் தலைமைப்பீடத்துக்கு மட்டுமல்ல, தமது சொந்த அமைச்சர்களுக்கும் உறுதியளித்திருக்கிறார்.

அரசு - விடுதலைப் புலிகளுக்கு இடையேயான உத்தேச சமாதான பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டம் அதி உயர் நிலையில் நேருக்கு நேர் பேச்சு நடத்துவதற்கான ஒழுங்கு விதிகளைத் தயாரிப்பது தான் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர்கள்மேல் மட்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

காமினி பொன்சேகா அரசியலுக்கு முழுக்கு

கொழும்பு, செப். 15

"மீண்டும் அரசியலில் குதிக்க மாட்டேன்" என்று முன்னாள் உபசபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

"உண்மையைச் சொல்ல நான் பயப்படுவதில்லை. அதனால் தான் நான் அரசியல் வாதியாக வெற்றிகரமாக செயல்பட முடியாதுள்ளது" — என்றும் அவர் உறுதியாக உண்மையைப் பேசுவதால் எதிரிகளை சம்பாதிக்க வேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-எ)

ஐ. தே. க. ஆதரவாளர் கொலை:

பிரதி அமைச்சர் வீரவன்னியை விசாரணை செய்ய முடிவு

சபாநாயகரின் அனுமதி பெறப்படும்

கொழும்பு, செப். 15

கடந்த பொதுத் தேர்தல் நடைபெற்ற ஐ. தே. க. ஆதரவாளரான சூட்டிக் விக்ரமரத்ன என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விவசாய காணி, வனவளப் பிரதி அமைச்சர் சமரவீர வீரவன்னியை விசாரணை செய்ய இரகசியப் பொலீஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இதற்கான அனுமதியை சபாநாயகரிடம் இரகசியப் பொலீஸார் இவ்வாரம் பெறுவர் என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக பிரதி அமைச்சர் வீரவன்னியைக் கைதுசெய்ஆஜர் செய்யும்படி பதுளை நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். எனினும் அவர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

சம்பவ தினம் பிரதி அமைச்சர், சூட்டிஸின் வீட்டினுள் புகுந்து தமது கையில் வைத்திருந்த சம்பினால் சூட்டியின் தலையைத் தாக்கினார் என்றும் —

அதன் காரணமாக சூட்டிக் மரணமானார் என்றும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

கொப்பேகடுவ மரணம் குறித்து உயர் நிலை விசாரணை

அரசியல் கண்ணி வெடித்தாக்குதலில் இராணுவத் தளபதிகள் கொப்பேகடுவ, விஜய விமலரத்னா உட்பட பல படை அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து உயர் நிலை விசாரணை ஒன்று நடத்த அரசு உத்தேசித்துள்ளது.

இத்தகவலை பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ரேணே அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள படை முகாம்களுக்கு இவர் அண்மையில் விஜயம் செய்தது தெரிந்ததே.

அப்போது படையினர் இப்படை அதிகாரிகளின் மரணங்கள் குறித்து உயர்நிலை விசாரணை நடத்தப்படுமா என்று கேட்டதற்கு, பிரதி அமைச்சர் முன்கண்டவாறு பதிலளித்தார். (இ-எ)

பிறப்பு சான்றிதழ் விண்ணப்பம் ஏற்பது நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 15

31-07-1954ஆம் ஆண்டுக்குப் பின் பதிவு செய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களை ஏற்பதை மறு அறிவித்தல் வரும்வரை நிறுத்தப்பட்டிருப்பதாக மேலதிக மாவட்ட பதிவாளர் அறிவித்துள்ளார்.

ஆயினும் குடும்ப அட்டைக்கான பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-111)

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடரப்பட்ட வழக்கு வாபஸ்

மானிப்பாய் இளைஞர் விடுதலையானார்

மானிப்பாயில் விடுதலைப் புலிகளுக்கு காப்பரண் வெட்ட உதவிய குற்றச்சாட்டின் பேரில் சிவதரன் என்ற தமிழ் இளைஞர் மீது தொடுக்கப்பட்ட வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அரசாங்க சட்டத்தரணி வாபஸ் பெற்றுக்கொண்டார்.

கொழும்பு கொள்வத்தை பொலீஸாரால் 24-8-93இல் கைது செய்யப்பட்ட சிவதரன் (வயது 19) என்ற இந்த இளைஞர் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எஸ். எச். தயானந்தவுக்கு அளித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் பேரில் இவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

தடுத்து வைக்கப்பட்டிருந்த சிவதரனுக்கு எதிராக நீதிபதி உபாலி குணரத்தன முன்னிலையில் இம்மாதம் 7 ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதாக இருந்தது. ஆனால் வழக்கு ஆரம்பமாக இருந்தபோது அரச சட்டத்தரணி தரப்பினர் எதிரி மீதான குற்றப்பத்திரிகையை தாம் வாபஸ் பெறுவதாகத் தெரிவித்தனர்.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் விசாரிக்கொள்ளப்பட்ட முதல் வழக்கு இது வாகும் என்று கொழும்பு பத்திரிகை செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-ஜ)

சு. கவில் மீண்டும் சேர அனுராவுக்கு அழைப்பு

தாயார் ஸ்ரீமாவோ விடுத்தார்

கொழும்பு, செப். 15

மீண்டும் சுதந்திரக் கட்சியில் சேருமாறு அனுரா பண்டாரநாயக்காவுக்கு அவரது தாயார் சிறிமாவோ அழைப்பு விடுத்திருப்பதாக தகவலறிந்த வட்டாரங்களை மேற்கொள்காட்டி "சண்டே லீடர்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த 3ஆம் திகதி அனுரா அமெரிக்கா பயணமானார். அதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்பாக சிறிமா இந்த அழைப்பை அனுராவுக்கு விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்மாவை திருப்திப்படுத்துவதா, இல்லையா என்ற இரண்டுங்கெட்டான் நிலையில் அனுரா இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒருபுறம் ஒற்றுமையாக பயணமாகவே கொண்டு இவர் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இரசாயன பொருள் விலை குறைப்பு

விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கான சாத்தியங்களை தற்போது அரசு ஆராய்கின்றது என அறிவிக்கப்படுகிறது.

இப்பொருள்களை விற்பனை செய்யும் 10 நிறுவனங்கள் எடுத்த 2 வாரகாலத்திற்குள் இதுபற்றி முடிவெடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கின்றன.

இந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் விவசாய காணிவள அமைச்சர் டி. என். ஜயரட்ணவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். கடுத்த பேச்சுவார்த்தையின் போது விலைகளைக் கொண்டுவரும் பூச்சிக்கொல்லி மருந்து [illegible] விலைகளை குறைக்கப்படும் என்று அவர் தெரிவித்தனர். (ஜ-4)

மேஜர் ஜெனரல் லக்கி லண்டன் பயணமானார்

கொழும்பு, செப் 15

இராணுவத் தலைமை நிர்வாக அதிகாரி மேஜர்ஜெனரல் லக்கி அலகம வைத்தியசிகிச்சைக்காக கடந்த ஒன்பதாம் திகதி லண்டன் சென்றார்.

குறைந்தது இரண்டு வாரங்கள் அவர் லண்டனில் தங்கியிருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்தவாரம் நிகழ்ந்த மேஜர் ஜெனரல் லக்கி அலகம கூட்பட ஆறு இராணுவ அதிகாரிகள் இராணுவச் சதி ஒற்றை நடத்த முயற்சித்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டை இவ்வதிகாரிகள் மறுத்துள்ளதுடன், இது குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தும்படியும் ஜனாதிபதியைக் கேட்டிருந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதியின் உத்தரவுப்படி குற்றப் புலனாய்வுப் பணிமனை எதிரவே விசாரணையை ஆரம்பித்துள்ளது. (ஒ-எ)

அதிகாரப் பகிர்வு பிரிவினையாகாது

நெவில் கனகரத்னா கூறுகிறார்

கொழும்பு, செப். 15

அதிகாரப் பகிர்வு நாட்டைப் பிளவுபடுத்தும் என்ற வாதத்தை ஏற்கமுடியாது.

இந்தியாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதர் நெவில் கனகரத்னா முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

சமஷ்டி அரசமைப்பு முறைமூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்க முடியும். ஒற்றையாட்சி அரசமைப்புக்கு நாம் கடிய முயற்சித்தவர்கொடுத்து வருகின்றோம்.

ஒற்றையாட்சி அரசமைப்பு இன்றி நாம் ஒற்றுமையாக வாழமுடியாதா?

இனப் பிரச்சினையை அரசியல் ரீதியானதாக கணுக வேண்டும், தீவிரவாதப் பிரச்சினை என்று கூறுவது கண்டிக்கப்படவேண்டும்.

அரசியல்வாதிகள் குறுகிய அரசியல் கண்ணோட்டங்களைக் கைவிடவேண்டும். இத்துன்பகரமான யுத்தம் நிறுத்தப்படவேண்டும் — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-எ)

ஜேர்மன் செல்ல முயற்சித்த 6 தமிழர் நீரில் மூழ்கிப் பலி

ஆற்றைக் கடந்தபோது சம்பவம்

பொன், செப். 15

ஜேர்மனிக்குள் பிரவேசிக்க முயன்ற ஈழத் தமிழர்கள் 6 பேர் அந்நாட்டின் எல்லைப் பகுதியில் உள்ள பொலந்து ஆற்றினுள் மூழ்கி மரணமாகினர்கள் என்று பாலீஸ் நகரில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஜேர்மன் நாட்டுக்குள் கள்ளவழிப் பிரவேசிக்கும் பொருட்டு இலங்கையர்கள் சிலர் அந்த ஆற்றைக்கடந்து சென்றனர் என்றும்— அச்சமயம் அவர்களில் 6 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

கஜார் 10 ஆயிரம் ஈழத் தமிழ் அகதிகள் ரஷ்யாவிலிருந்து ஜேர்மனியர்கள் என்றும் — இவர்கள் நாளதோறும், ஜேர்மன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குள் பிரவேசிப்பதற்கு முயன்று வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்வாறான சட்டவிரோத முயற்சிகளிலிருந்து இலங்கையர் பலர் உயிரிழந்திருப்பதாக தெரிய வருகின்றது என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஜ)

கனிஷ்ட தொழில் நுட்ப பரீட்சை

யாழ்ப்பாணம் செப். 15

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆண்டு 9 கனிஷ்ட தொழில் நுட்பப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி கோவிடங்களுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் இம்மாதம் 25 ஆம் திகதிக்குமுன் ஒப்படைக்கும்படி வலயம் 1லுள் அடங்கும் பாடசாலைகளின் அதிபர்களுக்கு கல்விப் பணிப்பாளர் அறிவித்திருக்கிறார். (இ)

திலீபனின் நினைவு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரிடமிருந்து ஆலோசனைப் பெற்று அமைக்கப்பட்டு தியாகி திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

கோட்ட ரீதியாகவும், வட்டார ரீதியாகவும் இன்று முதல் உண்ணாவிரத நிகழ்வுகள் ஆரம்பமாக உள்ளன. அவ்வப்பகுதி மக்கள் அவற்றில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாடசாலைகளில்

தியாகி திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகளில் இன்று முதல் உணர்வுபூர்வமாகக் கலந்துகொள்ளுமாறு தமிழீழ மாணவர்களுக்கு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இன்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதிவரை நிலமும் காலையில் பாடசாலைகளில் தியாகியின் உருவப்படத்துக்கு மலர்ஞ்சலி செய்யுமாறும்— 30 நிமிட நேர அஞ்சலி நிகழ்ச்சிகளை நடத்துமாறும் மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

நினைவு நாட்களின் இறுதி நாளான இம்மாதம் 26ஆம் திகதி கோட்ட ரீதியான உண்ணாவிரதங்கள் இடம் பெறும். நினைவு வீரவணக்கக் கூட்டமும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

உண்ணாவிரதம்

உண்ணாவிரதம் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:- கட்டுரிமாக உடுவிலில் ஒன்றாகும் கிவள் கோயிலடியிலும், சங்கானையில் வடக்கம்பரை அம்மன் கோயிலடியிலும், சண்டிலிப்பாயில் ஆலங்கேணிக்கோட்டை முத்தமிழ்நாதர் கோயிலடியிலும், கோப்பாயில் நீர்வேலி கந்தசாமி கோயிலடியிலும், யாழ்ப்பாணம் நல்லூரில் நல்லூர் கந்தசாமி கோயிலடியிலும், வருத்தியடியில் மந்திகை அம்மன் கோயிலடியிலும், தரவெட்டியில் துன்னாலை கலிகைக் கந்தன் ஆலயத்திலும், உடுப்பிட்டியில் விநாயகர் சனசமூக நிலையத்திலும், வைதியில் வைதிச் சந்திபிலும், சாவகச்சேரியில் மணல்குணாப் பிள்ளையார் கோயிலடியிலும்—

கொடிகாமத்தில் ரயில் நிலையத்திற்கு அருகிலும், பளையில் இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியிலும் உண்ணாவிரதமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-ஜ-4-15-111-117)

அமிலிப்பிட்டியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மவிந்த எலும்புக்கூடுகள் பதிய பூர்வாங்க அறிக்கை நேற்று எம்பிலிப்பிட்டிய நீதிவான் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது.

18 -45 வயதுக்கு இடைப்பட்ட 21 பேரின் சடலங்களின் பகுதிகள் அப்போது மீட்டு எடுக்கப்பட்டன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-6-4)

திலீபனின் நினைவு...

(கடந்த...)

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படும் என்று கூறிய அவர் —

இராணுவத்தினர் புரிந்த அட்டூழியங்கள், கொடுமைகள் குறித்தும் விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என்றார்.

நீதியின் ஆட்சியின் (Rule of Law) எமது அரசு முழு நம்பிக்கை கொண்டுள்ளது. ஒவ்வொரு விடயமும் சட்ட ரீதியான முறையில் கையாளப்படும் என்றும் அவர் கூறினார். (உ-ம)

digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் குரல் வானொலியில்

15 — 09 — 1994
வியாழன் இரவு

★ 8-01 — நியாதிபம் செய்தியைப் பேணக் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "திலீபனின் நினைவுகள்"
★ 8-20 — உழப் போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் மரக்கறித்தொழில் உரைச்சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து நேதாஜியின் வீரப்போர் என்ற நூலிலிருந்து 'நெடுங்கடலில் நேதாஜி' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
★ 8-50 — மலரும் மொட்டுகள்

16 — 09 — 1994
வெள்ளி காலை

★ 7-02—மாவீர வணக்கம்
★ 7-15 — மணிவாரம்
★ 7-30 —செய்திகள்
★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நியாதிபம் செய்தியைப் பேணக் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "பசிப்போரில் பன்விரு நாட்கள்"

விடுகள் கையளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 15

சாவகச்சேரி அறவழிப் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் கொடிகாமத்தில் இராஜகிரி இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கும் புதிய வீடுகள் கையளிப்பு விழா நாளை (வெள்ளி) பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஜ)

அதிபாகர் கூட்டம்

யாழ்ப்பாணம், செப் 15

சண்டிலிப்பாய், தெல்லிப்பளை கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமொன்று இன்று வியாழன் பிற்பகல் 3மணிக்கு மாவிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது என பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 15

கடந்த 13 ஆம் திகதி மன்னாரில் நடைபெற்ற இடம் பெற்ற வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

மேஜர் தர்மேந்திரா என்று அழைக்கப்படும் மன்னார் அடம்பனைச் சேர்ந்த வேலு கணபதி என்பவரே வீரச்சாவடைந்தவர் ஆவார். (ஒ-4)

வேரோட நீர் வேண்டும்
நீர் தேங்க குளம் வேண்டும்

ஏல விற்பனை

கட்டடப் பொருள்கள்

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையிற் கட்டடப் பொருள்கள் 20-09-94 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 11-00மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படும். பொருள்களை வாங்க விரும்புவோர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நீர்த் தாங்கிக்கு அருகிலமைந்துள்ள எமது பிரதேச அலுவலகத்தில் சமுகமளிக்கவும்.

ஏலத்தில் வெற்றி கொள்வோர் உடனடியாக உரிய பணத்தைச் செலுத்தி, அப்பொழுதே பொருள்களை அகற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

பொருள்களை 20-09 94 அன்று காலை 9-00 மணிமுதல் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களுக்கு யாழ். கடற்கரை வீதியிலமைந்துள்ள நிர்மாண திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தை அலுவலக நேரத்தில் நாடலாம்.

சு. சுந்தரகுமார்,
பதில் பிரதம பொறியியலாளர்,
நிர்மாண திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாண திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். (சி 9120)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 10 — 03 — 1925

விண்ணில்: 27 — 08 — 1993

திருமதி சிந்தாமணி தங்கரத்தினம்

திதி 15—09—1994

பன்னிரண்டு மாதங்களாய்
அம்மாவே நீ பிரிந்தும்
ஆண்டாண்டாய் நீ தந்த
ஆதரவை நாம் மறவோம்
பண்பு எனும் பசுமையிட்டு
பாசமுடன் ஆளாக்கி
அன்பு எனும் நீருற்றி
ஆசையுடன் வளர்த்த அம்மா! அம்மம்மா!
இன்பத்திலும் துன்பத்திலும்
சவிக்காது தவை நிமிர்ந்து
எம்மை ஆளாக்கிய அம்மாவே! அம்மம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

பிரியாத் துயருடன்
கணவன், மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

"மணி மோட்டோஸ்"
வல்லிக்காடு. (32871)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 08 — 12 — 1973

உதிர்வு: 27 — 08 — 1993

செல்வன் செல்லத்துரை தில்ஸதுபன்

(மத்திய கல்லூரியின் பழைய மாணவன்)
(புங்குடுதீவு -6)

திதி: ஏகாதசி 15 — 09 — 1994

நற்றவத்தின் பெறுபேறாய் அறிபுதமாய் -
உற்பவித்தாய்
சற்குணங்கள் பலதொண்டு சார்ந்தோரை -
வசங்கொண்டாய்
மத்தியத்தில் மாணவனாய் கல்விக்கடல் -
முத்தெடுத்தாய்
இத்தனையும் நினைக்குமென இன்னுயிரை -
கண்டிருந்தோம்

பெற்றவர்கள் பரிதவிக்கப், பேரன்பு உற்றவர்கள் -
கலங்கியழ
நற்குணனே உனையிழந்து ஓராண்டு மாயினதோ?
எத்தனை நாள் ஆண்டுகள் ஓடோடி மறைந்தாலும்
எப்படி நாம் மறந்திடுவோம் எம்மிடை நீ மறுபடியா!

அப்பா, அம்மா,
சகோதரிகள், மைத்துனர்
மருமக்கள், அரிச்சந்திரன் மாமா.

"ஞானா சேவ்"
85/21, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (32866)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெடினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 293/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15 - 09 - 1994 இல் அச்சிடப்பெற்று வெளியிடப்பெற்றது.

பிற்போடப்பட்டுள்ளது

தொழில் நுட்ப கல்லூரி மாணவர் அவையால்

18 - 09 - 1994 அன்று நடத்தப்படவிருந்த கலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம். கலை நிகழ்ச்சி நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- மாணவர் அவை.

பிறவுன் வீதி,
கொக்குவில். [7916]

KEEN

திருநெல்வேலி

A/L DAY CLASS

(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரிய வகுப்பு)

பொருளியல்	— எஸ். வரதராஜன்
கணக்கியல்	— சௌந்தி
வர்த்தகம்	— வரதன்
அளவையியல்	— எஸ். எஸ். மனோகரன்
தமிழ்	— பாவா
புவியியல்	— சேரன்
இந்துநாகரீகம்	— காரை. எஸ். கெங்கா

ஆரம்பம்: 20-09-1994
செவ்வாய் காலை 8 a m.

[சி-9165]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
நல்லூர் பிரிவு
தேவை

1. பயிலுநர்
   நவீன முறையில் ZIG ZAG மிஷின்களில் தையல் பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
2. தையல் பயிற்சி ஆசிரியை
   சம்பளம் பேசித்தீர்க்கப்படும்
3. முச்சக்கர வண்டி ஓடுவதற்கு சாரதி
   கொடுப்பனவு பேசித்தீர்க்கப்படும்.

விண்ணப்பதாரிகள் 18 - 09 - 1994 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு எமது பணிமனைக்கு நேரில் வரவும்.

- கௌரவ செயலாளர்.

காங்கேசன்துறை வீதி,
(இந்துக் கல்லூரிக்கு அருகில்)
கொக்குவில். [32890]

கண்ணீர் அஞ்சலி

கோண்டாவில் வடக்கு சிவபூதவராயர் ஆலய சித்திரத் தேரை உருவாக்கிய தந்த சிற்பாசாரியரும், இளைப்பாறிய சித்திர வித்தியாபதியும் சிறந்த சிற்பக் கலைஞரும் ஆகிய

கலாகேசரி

அமரர் ஆ. தம்பித்துரை

அவர்களின்

மறைவு குறித்து எமது அனுதாபத்தையும் துயரத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோண்டாவில் வடக்கு சிவபூதவராயர் ஆலய நிர்வாக சபையினரும்,
பொதுமக்களும். [32889]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 31 — 05 — 1958

உதிர்வு: 27 — 08 — 1993

அமரர் சிவராசா விசாகமூர்த்தி

(புளுவாழுவுக்கிளை யாழ். செயலகம்)

திதி: 15 - 09-1994

எங்கள் கண்களுக்கு உங்கள் உருவம் சொந்தம்
எங்கள் நெஞ்சிற்கு உங்கள் நினைவுகள் சொந்தம்
கண்களை விட்டுக் கண்மணியே பிரிந்தனை
விண்ணை விட்டு வெண்ணிலா பிரிந்தது
எம்மை விட்டு நீங்கள் பிரிந்தீர்கள்
ஆனால் உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு என்றும் பிரியாது

உங்கள் பிரிவால் அல்லலுறும்!
பெற்றோர், மனைவி, மகள்
சகோதரர்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம். (32878)

சிறப்பிட்டி

ஸ்ரீ மனோன்மணி அம்மன் கோவில்
புதிய சித்திரத் தேர்
அச்சாணி வைத்தல்

காலம்:

நிகழும் பவ வருஷம் ஆவணி 30 ஆம் திகதி (15 - 09 - 94) வியாழக்கிழமை காலை 8-15 — 9-51 வரையுள்ள சுபமுகூர்த்தவேளை

சிற்பாசாரியார்:

விஸ்வப்பிரமஸ்ரீ
செ பாலச்சந்திரனும் குழுவினரும்
ஸ்ரீ காளியம்மன் சிற்பாலயம் புத்தூர்

முதன்மை விருந்தினர்:

திரு. N S. கந்தையா
(இளைப்பாறிய ஆசிரியர்)

சிவனடியாரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தேர்த் திருப்பணிச் சபையார்

சிறுப்பிட்டி,
நீர்வேலி. (சி-9124)

கலாகேசரி தம்பித்துரை

அன்னையின் இந்தியாவின் காமான முன்னாள் சித்திரப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் நமது மன்ற தொடக்கால உபதலைவருமான சிற்பக் கலைஞர்

கலாகேசரி தம்பித்துரை

அவரதவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

வட இலங்கை நுண்கலை மன்றம்,
கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.
(சி-9117)

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L கலை, வர்த்தகம்
பகல் நேர வகுப்புகள்

(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரியது)

ஆரம்பம்: 29 - 09 - 1994
வியாழன் 8 - 00 a. m.

★ கலுமதியான முக்கூட்டியே பெற்றுக்கொள்ளவும். [சி-9162]

வடமராண

தெ, ப, பொ, கூ, சங்கங்களின் சமாசத்தின்

முக்கிய அறிவித்தல்

இன்று (15 - 9 - 94) நல்லூரில் ஆரம்பமாகும் தியாகி திலீபன் அவர்களின் நினைவு நாள் உண்ணாநோன்பில் கலந்து கொள்ளும் பொருட்டு எமது நிறுவனம் மூடப்பட்டிருக்கும் என்பதனை எமது அங்கத்துவ சங்கங்களுக்கும் எமது ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்வோருக்கும் அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்
வடமராண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்.
யாழ்ப்பாணம். (சி/9122)

மரண அறிவித்தல்கள்

திருமதி பூபதி அருள்நேசன்

திருமதி பூபதி அருள்நேசன் 13 - 9 - 94 அன்று கனடாவில் காலமானார். இவர் நாரந்தனை தெற்கைச் சேர்ந்த அவுறான் மனவர்பிள்ளை, காலஞ்சென்ற சிலியம்மா தம்பதியின் அன்புப் புதல்வியும், மிதலிலைச் சேர்ந்த இராசேந்திரம் அருள்நேசனின் அன்பு மனைவியும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அவுறான் மனவர்பிள்ளையும்,
சகோதரர்களும்.

கல்லிட்டி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு. [32892]

திருமதி நல்லம்மா தில்லையம்பலம்

திருமதி நல்லம்மா தில்லையம்பலம் 13 9 94 இல் காலமானார். இவர் உரும்பராய் மிருக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் [நில அளவையாளர்] சிவராசா, நிலைநடராசா, தெ. ராசமலர் ஆகியோரின் அருமைத் தாயாரும் செ. தெய்வேந்திரம், மனோன்மணி, கிளிஞ்சுபதி, நந்தினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று 15. 9. 94 மாலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. தெய்வேந்திரம்
(மருமகன்)

[ஐ2893]

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 15

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழன் மாலை சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:

3.00 மணி: உடுவில் முருகமூர்த்தி வித்தி. எதிர் உடுவில் மகளிர் ம. வி. (15 வயதுப் பிரிவு)

4.00 மணி: கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி. எதிர் ஏழாலை ம. வி. (17 வயதுப் பிரிவு)

5.00 மணி: சுன்னாகம் மயில்வாணி ம. வி. எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் ம. வி. (17 வயதுப் பிரிவு)

(ஐ-20)

சைவ நெறித் தேர்வு பரிசளிப்பு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்திய சைவ நெறித் தேர்வின் அகில இலங்கை பரிசளிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்று முற்பகல் 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது

பிரதம விருந்தினராக யாழ் வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் செல்வி நிராவதி பெரியதம்பி கலந்து கொள்வார்.

இந்தியாவிலிருந்து பருப்பு

இலங்கையில் ஏற்பட்டுள்ள பருப்புத் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்கு இந்தியா அவசரமாக 5ஆயிரம் [தொன்] பருப்பை அனுப்ப உடன்பட்டுள்ளது. (இ-4)

பொலீஸார்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணை ஒன்றை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றின் பொறுப்பதிகாரியாக அச்சமயம் கடமையாற்றிய ஒருவர் தனக்குக் கீழே இருந்த பொலீஸாருக்கு துரோகம் இழைத்துவிட்டார் என்று அண்மையில் வடுத்த வைபவ்வினால் விடுவிக்கப்பட்ட சிறைப் பொலீஸார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

"எமது அதிகாரிகளே எங்களுக்குத் துரோகம் இழைத்தனர்" என நாம் விடுதலை செய்யப்பட்ட பின்னர் பலாலியில் நடமாடிக்கொண்டிருந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் இவர்களில் சிலர் கூறியதாகத் தெரிகிறது. எங்களைச் சரணடையுமாறு கூறிவிட்டு அந்த அதிகாரி தம்பி ஓடி விட்டார் என்றும் பொலீஸார் அமைச்சரிடம் கூறினர்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

எங்களை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பான தோட்டத் தொழிலாளர் தலைவர். தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி அவரது நிலைப்பாடுகள் அமைந்துள்ளன. எனவே பதவிக்கு வரும் எந்த அரசாங்கத்தையும் அவர் பகைத்துக் கொள்ள விரும்புவதில்லை. எனினும் ஐ. தே. கவின் சார்பிலேயே அவரது கட்சியினரும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர். எங்களோடு நெடுநாள் இந்தத் தொழிலாளர் நலன்களையும் உரிமையையும் பெற்றவர் அவர்.

ஆகவே எவரிடம் எங்களை விட்டுப் போகமாட்டார். இது என் நம்பிக்கை. — இவ்வாறு சாமி நிராகரிக்கவா பதிலளித்தார். [ஐ]

ஜனாதிபதி:

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நடந்த கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவர் திரு. ஆடைக்கல நாதன் செல்வம், திரு. விநாதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இளையகுட்டி பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

நாம்தான் இரு பெரும் அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் நாட்டின் புரையோடிப் போயுள்ள இன பிரச்சனைக்கு அரசியல் தீர்வை முன்வைக்கவில்லை என்பதை எடுத்துக்காட்டி— அந்த இரண்டு கட்சிகளையுமே நிராகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தனாதி பதித் தேர்தலில் போட்டியிட தமிழீழ விடுதலை இயக்கம் முன் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org